# அவசரகூட்டப்பொருட்கள்

1. நாகர்கோவில் மாநகராட்சி கொரோனாவைரஸ் தடுப்பு முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக கன்னியாகுமரி மாவட்ட ஆட்சிதலைவர் அவர்களின் 07.05.2020-ம் தேதியிட்ட பத்திரிக்கை செய்தியில் 09.05.2020 லிருந்து மறு உத்தரவு வரும்வரை காலை 6.00 மணிமுதல்மதியம் 1.00 மணிவரை கட்டுப்பாடுகள் விதித்து தனிகடைகள் திறக்க அனுமதிக்கப்பட்டுள்ளது. இந்நிலையில் இம்மாநகராட்சி பகுதிகளில் இயங்கும் சிறுவணிக நிறுவனங்கள், வணிக நிறுவனங்கள் மற்றும் அரசு மற்றும் தனியார் நிறுவனங்கள் ஆகியவற்றிற்கு வரும் பொதுமக்கள் சமூக இடைவெளியினை கடைபிடிக்காதபட்சத்தில் கீழ்கண்டுள்ளபடி கடை உரிமைதாரருக்கு அபராதத்தொகை விதித்து நடவடிக்கை எடுக்கும் பொருட்டு ஒப்புதலுக்கு வைக்கப்படுகிறது.

<u>முதல் முறை அபராதம் :</u>

1. சிறு வணிக நிறுவனங்கள் - ரூ. 100/-
2. வணிக நிறுவனங்கள் - ரூ. 200/-
3. அரசு மற்றும் தனியார் நிறுவனங்கள் - ரூ. 500/-

<u>இரண்டாம் முறை அபராதம்:</u>

1. சிறுவணிக நிறுவனங்கள் - ரூ. 200/-
2. வணிக நிறுவனங்கள் - ரூ. 500/-
3. அரசு மற்றும் தனியார் நிறுவனங்கள் - ரூ. 1000/-

மேற்கண்டுள்ளபடி ஒருகடைக்கு இரு முறை அபராதம் விதிக்கப்பட்டு மீண்டும் தொடர்ந்து சமூக இடைவெளியினை கடைபிடிக்காத பட்சத்தில், பேரிடர் மேலாண்மைவிதி 2005-ன்படி பிரிவு 51, 52, 53, 54, 55, 56, 57, 58, 59, 60 மற்றும் 65-ன் கீழ் மாநகராட்சி நிர்வாகம் மூலம் நடவடிக்கை மேற்கொண்டு கடைகள், வணிக நிறுவனங்கள், அரசு மற்றும் தனியார் நிறுவனங்கள் மூடுவதற்கு மன்றத்தின் அங்கீகாரத்திற்கு வைக்கப்படுகிறது.

அலுவலககுறிப்பு - அங்கீகரித்து ஒப்புதல் அளிக்கலாம்.

கோப்பு எண்.1133/2020/எச்1

**தீர்மானம் எண்.278 - அங்கீகரிக்கப்பட்டது**